# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஒன்பதாம் பத்து

## ஆறாம் திருவாய்மொழி - உருகுமால்
## ஆழ்வார் எம்பெருமானது குணங்களை இன்னாப்புடன் கூறி அருளுதல்

** உருகுமால் நெஞ்சம் * உயிரின் பரம் அன்றி *
பெருகுமால் வேட்கையும் * என் செய்கேன் தொண்டனேன்? **
தெரு எல்லாம் காவி கமழ் * திருக்காட்கரை *
மருவிய மாயன் தன் * மாயம் நினைதொறே 1

நினைதொறும் சொல்லுந்தொறும் * நெஞ்சு இடிந்து உகும் *
வினை கொள் சீர் பாடிலும் * வேம் எனது ஆருயிர் **
சுனை கொள் பூஞ்சோலைத் * தென் காட்கரை என் அப்பா! *
நினைகிலேன் நான் * உனக்கு ஆட்செய்யும் நீர்மையே 2

நீர்மையால் நெஞ்சம் * வஞ்சித்துப் புகுந்து * என்னை
ஈர்மை செய்து * என் உயிராய் என் உயிர் உண்டான் **
சீர் மல்கு சோலைத் * தென் காட்கரை என் அப்பன் *
கார் முகில் வண்ணண் தன் * கள்வம் அறிகிலேன் 3

அறிகிலேன் தன்னுள் * அனைத்து உலகும் நிற்க *
நெறிமையால் தானும் * அவற்றுள் நிற்கும் பிரான் **
வெறி கமழ் சோலைத் * தென் காட்கரை என் அப்பன் *
சிறிய என் ஆருயிர் உண்ட * திருவருளே 4

திரு அருள் செய்பவன் போல * என்னுள் புகுந்து *
உருவமும் ஆருயிரும் * உடனே உண்டான் **
திரு வளர் சோலைத் * தென் காட்கரை என் அப்பன் *
கரு வளர் மேனி * என் கண்ணன் கள்வங்களே 5

என் கண்ணன் கள்வம் * எனக்குச் செம்மாய் நிற்கும் *
அங்கண்ணன் உண்ட * என் ஆருயிர்க் கோது இது **
புன்கண்மை எய்திப் * புலம்பி இராப் பகல் *
என் கண்ணன் என்று * அவன் காட்கரை ஏத்துமே 6

காட்கரை ஏத்தும் * அதனுள் கண்ணா! என்னும் *
வேட்கை நோய் கூர * நினைந்து கரைந்து உகும் **
ஆட்கொள்வான் ஒத்து * என் உயிர் உண்ட மாயனால் *
கோட்குறை பட்டது * என் ஆருயிர் கோள் உண்டே 7

கோள் உண்டான் அன்றி வந்து * என் உயிர் தான் உண்டான் *
நாளு நாள் வந்து * என்னை முற்றவும் தான் உண்டான் **
காள நீர் மேகத் * தென் காட்கரை என் அப்பற்கு *
ஆளன்றே பட்டது * என் ஆருயிர் பட்டதே 8

ஆருயிர் பட்டது * எனது உயிர் பட்டது? *
பேர் இதழ்த் தாமரைக் கண் * கனி வாய் அதோர் **
கார் எழில் மேகத் * தென் காட்கரை கோயில் கொள் *
சீர் எழில் நால் தடந்தோள் * தெய்வ வாரிக்கே 9

வாரிக் கொண்டு உன்னை * விழுங்குவன் காணில் என்று *
ஆர்வுற்ற என்னை ஒழிய * என்னில் முன்னம்
பாரித்து ** தான் என்னை * முற்றப் பருகினான் *
கார் ஒக்கும் * காட்கரை அப்பன் கடியனே 10

** கடியனாய்க் * கஞ்சனைக் கொன்ற பிரான் தன்னை *
கொடி மதிள் தென் குருகூர்ச் * சடகோபன் சொல் **
வடிவமை ஆயிரத்து * இப்பத்தினால் சன்மம்
முடிவு எய்தி * நாசம் கண்டீர்கள் எங்கானலே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---